# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

********************

## இலங்கையின் மிகச்சிறந்த நண்பனாக இந்தியா

கொழும்பில் 2023 பெப்ரவரி 07ஆம் திகதி நடைபெற்ற Tata Tiscon முகவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியிருந்த இலங்கை பிரதமர் மேன்மைதங்கிய தினேஷ் குணவர்தன அவர்கள், இலங்கையில் தொடர்ந்து முதலீடுகளை மேற்கொள்ளுமாறு இந்திய நிறுவனங்களிடம் அழைப்பு விடுத்துள்ளார். இலங்கையில் இந்திய முதலீடுகள் மூலமான நன்மைகள் குறித்து இங்கு குறிப்பிட்டிருந்த இலங்கை பிரதமர் அவர்கள், லங்கா அஷோக் லேலன்ட் நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் 90 வீதமான பாகங்கள் சொந்தநாட்டில் உற்பத்திசெய்யப்படுபவை எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் நெருக்கடிநிலைகளின்போதெல்லாம் ஆதரவளித்து துணைநின்ற சிறந்த நண்பனே இந்தியா எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

2. பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின்கீழ் குறிப்பாக அயலுறவுகளுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில், இந்தியாவுக்கு அப்பாலும் இந்தியாவிற்குள்ளும் வசிக்கும் மக்கள் பலனடையும் நோக்குடன் தொடர்புகளை கட்டிஎழுப்பும் இலக்கினை அடிப்படையாகக்கொண்டு இந்திய அரசாங்கமும் இந்திய கோப்பரேட் நிறுவனங்களும் செயற்பட்டு வருவதாக இந்நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் மாண்புமிகு கோபால் பாக்லே அவர்கள் குறிப்பிட்டார். இந்த உத்வேகம் மற்றும் ஈடுபாடு ஆகியவற்றின் பின்புலத்தில் காணப்படும் உந்துசக்தியாக சமூகங்களை மையமாகக் கொண்ட வர்த்தக செயன்முறைகளும் வசுதைவ குடும்பகம் (உலகம் ஒரு குடும்பம்) என்ற கொள்கையும் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

3. மேலும், இந்தியாவையும் இலங்கையையும் “நாகரிக இரட்டையர்கள்” என வர்ணித்த உயர் ஸ்தானிகர் அவர்கள், இரு நாடுகளினதும் அரசாங்கங்களும் மக்கள் – மக்கள் தொடர்புகளையும் அதே நேரம் வர்த்த - வர்த்தக உறவுகளையும் ஊக்குவிப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் இந்த மாநாட்டில் ஏராளமான இந்திய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை இரு நாடுகளுக்கும் இடையிலான

உறவில் மட்டுமன்றி இலங்கையின் ஆற்றலிலும் மிகப்பெரிய நம்பிக்கையினை வெளிப்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

4. இருநாடுகளுக்கும் இடையிலான வியாபார மற்றும் வணிக தொடர்புகள் ஸ்திரமான வளர்ச்சியினை எட்டியுள்ளது. 2021 இல் இலங்கையில் அதிகளவான முதலீட்டினை மேற்கொண்ட நாடாகவும் இலங்கையிலிருந்து அதிகளவிலான ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்ட நாடாகவும் இந்தியா உள்ளது. அதுமட்டுமல்லாமல் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகைதரும் நாடாகவும் இந்தியா உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதிகரிக்கப்பட்ட பொருளாதார செயற்பாடுகள், பெறுமதிசேர் பொருட்கள், சேவைகள், இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்புகள், மற்றும் தொழில்நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு அடிப்படையிலான பல செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலமாக இலங்கையிலுள்ள இந்திய நிறுவனங்கள் இலங்கையின் பொருளாதார மீட்சிக்காக கணிசமான பங்களிப்பை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**************

**கொழும்பு**
**7 பெப்ரவரி 2023**